மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.13/2023</u>

2026 ம் ஆண்டு மார்ச் 02 ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூங்கோதை | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>02.03.2026 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. காங்கேயம்பாளையம் முதல் நத்தக்காட்டு வலசு செல்லும் தென்வடல் இட்டேரியானது க.ச.எண்.579 காலைக்கு கிழபுரத்தில் உள்ளது என்றால் ஆமாம். அந்த தென்வடல் இட்டேரியில் இருந்து க.ச.எண்.579 காலையில் வடபுறத்தில் கிழமேலாக 10 அடி அகலத்தில் தடம் உள்ளது என்றால் சரிதான். அந்த 10 அடி அகல கிழமேல் தடத்தின் தென் புறத்தில் உள்ள பூமியானது க.ச.எண்.579 க்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

2. க.ச.எண்.579 ன் பூமியின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 10 ஏக்க 15 சென்ட் அந்த நிலத்தில் சுப்பராய கவுண்டரின் வாரிசுகளுக்கு 5 ஏக்கர் 7-1/2 சென்ட் பூமியும், எனது தாத்தாவான சின்ன கவுண்டர் என்கிற சின்னப்ப கவுண்டருக்கு 5 ஏக்கர் 7-1/2 சென்ட் பூமியும் பாத்தியம் என்றால் சரிதான். சுப்பராய கவுண்டர்

வகையறாவிற்கு பாத்தியப்பட்ட 5 ஏக்கர் 7–1/2 சென்ட் பூமியில் மத்தியில் தென்வடலாக தெற்கு நோக்கி ஒரு வண்டித்தடம் செல்கிறது என்றால் சரிதான். அந்த தடம் வழியாக சென்றால் தான் பிரதிவாதிகளுக்கு க.ச.எண்.579 ல் பிரதிவாதிகள் பூமிக்கு செல்ல முடியும் என்றால் சரிதான்.

3. க.ச.எண்.579 ல் 10 ஏக்கர் 15 சென்ட் பூமிகளுக்கு மேல் புறத்தில் 573 பூமி உள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.573 இல் பூமிகளை ஒரு 15 ஆண்டுகளுக்கு முன்பு பிரதிவாதி கிரயம் வாங்கினார் என்றால் கிரையம் வாங்கி தெரியும் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு வாங்கினார் என்று தெரியாது. நான் சொன்ன 10 அடி கிழமேல் தடத்திற்கு வடபுறம் 572 ல் எங்கள் வகையறாவிற்கு பூமிகள் உள்ளது என்றால் சரிதான். அந்த க.ச.எண்.572 பூமிகளின் மொத்த விஸ்தீரணம் 10 ஏக்கர் 1 சென்ட் என்றால் சரிதான் அதில் மேற்புற பாகம் சுப்பராய கவுண்டர் வகையறாவிற்கும், கீழ்புர பாகம் சின்னப்பகவுண்டர் வகையறாவிற்கும் தலா 5 ஏக்கர் அரை சென்ட் பூமி பாத்தியம் என்றால் சரிதான்.

4. நான் சின்னப்ப கவுண்டர்வகையறா வாரிசு என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் நாச்சிமுத்து கவுண்டர் என்றால் ஆமாம். எனது தகப்பனார் பெயர் சுப்புராயன் என்கிற சுப்பிரமணி. என் தாயார் பெயர் பழனியம்மாள். க.ச.எண்.572 பூமியை பொறுத்து எனது தாத்தா நாச்சிமுத்து கவுண்டரும், பிரதிவாதிகளின் தாத்தா பழனிச்சாமி கவுண்டரும், ஒரு கருப்பணகவுண்டரும் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் கிழக்கோட்டு பாகம் யாருக்கு ஒதுக்கினார்கள் என்றால் கருப்பணகவுண்டருக்கு ஒதுக்கினார்கள். அதற்கு மேல் புறத்து பாகம்

என் தாயார் பழனியம்மாளுக்கு ஒதுக்கினார்களா என்றால் ஆமாம். அதற்கு மேல்புறத்து பாகம் பிரதிவாதிகளின் தாத்தா பழனிச்சாமி கவுண்டருக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எங்களுக்கு பாகம் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் க.ச.எண்.572/5 என்றால் சரிதான்.

5. கருப்பண கவுண்டருக்கு பாகம் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை பழனிசாமி கவுண்டர் கிரயம் வாங்கிவிட்டது. அதன்படி க.ச.எண்.572/6 மற்றும் க.ச.எண்.572/4 ஆகிய பூமிகள் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என்றால் சரிதான். 02.03.1959 தேதியில் பழனிச்சாமி கவுண்டர், கருப்பண்ண கவுண்டர், நாச்சிமுத்து கவுண்டர் ஆகியவர்கள் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் ஆமாம். க.ச.எண்.572 பூமிக்கு வடபுறத்தில் க.ச.எண்.571/1 பி எங்களுக்கு பூமிகள் இருந்ததா என்றால் முன்பு இருந்தது. அந்த பூமிகளை நாங்கள் பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து விட்டோம் என்றால் முன்பு கிரயம் கொடுத்திருந்தார்கள் அந்த விபரங்கள் எனக்கு தெரியவில்லை.

6. க.ச.எண்.579 பூமிகளின் மேல்புற அத்து முடிவடையும் இடமும், க.ச.எண்.572 பூமிகளின் கிழக்கோட்டு பாகமும் ஒரே நேர்கோடாக உள்ளது என்றால் இல்லை. க.ச.எண்.579 பூமியின் மேல்புற அத்தானது க.ச.எண்.572 பூமியில் எங்களுக்குள்ள பூமியின் கிழபுறத்தில் உள்ள பிரதிவாதிகள் பூமியோடு முடிவடைந்து விடுகிறது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் சுப்பராய கவுண்டரின் வாரிசுகளான பழனிச்சாமி மற்றும் நாச்சிமுத்து கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட க.ச.எண்.572 பாகத்திற்கு தடம் கண்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல.

7. மேற்படி ஆவணத்தில் சின்னப்ப கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட பாக சொத்துக்களுக்கு தடம் கண்டு எழுதி உள்ளார்கள் என்றால் சரிதான். 02.03.1959 தேதியில் சின்னப்ப கவுண்டரின் வாரிசுகள் பாகம் செய்து கொண்டார்களா என்றால் ஆமாம். அந்த பாகப்பிரிவினையில் ஏ அட்டவணை சொத்தாக பழனிச்சாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் மேல் புறத்தில் தென்வடலாக 13 அடி அகலத்தில் தடம் போட்டு 571/1ல் 1பி காலைக்கு நடந்து கொள்ள வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. சுப்பராய கவுண்டரின் மகன்களான பழனிச்சாமி கவுண்டர் மற்றும் நாச்சிமுத்து கவுண்டர் ஆகியோர்களுக்கு க.ச.எண்.572ல் பாகம் ஒதுக்கப்பட்ட சொத்துகளுக்கு கிளப்புறத்தில் தென்வடலாக ஒரு இட்டேரி செல்கிறது என்றால் சரிதான். அது அவர்களுக்குள் அமைத்துக் கொள்ளப்பட்ட இட்டேறியாகும்.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வா.சா.2ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.03.02 18:33:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்